திருவள்ளுவர் ஆண்டு 2035

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 98 பகுதி : 10 அக்டோபர் 2004

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை | செயலாளர் |
| திரு. மா. சங்கர பாண்டியன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். ந. சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக் | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் | உறுப்பினர் |
| திரு. இரா. கண்ணன் | உறுப்பினர் |
| திரு. மா.ச. கார்த்திகேய பாலாஜி | |

## கல்லூரிக்குழு

| | |
|---|---|
| டாக்டர்.திரு.ந.சேதுராமன், M.S.,MCh.,(URO).,M.N.M.S.(URO).,FICS., | தலைவர் |
| திரு. மா.சங்கரபாண்டியன்,பி.ஏ., பி.எல் | செயலாளர் |
| திரு. இரா.அழகுமலை, எம்.ஏ.,எம்.ஃபில்., | உறுப்பினர் |
| திருமதி. ராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர்.மலையாண்டி (எ) அசோக், பி.எல்., | உறுப்பினர் |
| திரு. எஸ்.பரங்குன்றம், பி.ஏ. | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி, பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. மா.ச. கார்த்திகேய பாலாஜி | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் | உறுப்பினர் |
| டாக்டர் திரு. நா.பாலுசாமி, எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.,பி.எச்டி., | உறுப்பினர் |
| திருமதி. வாசுகி இராஜா, எம்.எஸ்.சி.,எம்.ஃபில்., | உறுப்பினர் |
| டாக்டர்.திரு. க.சின்னப்பா, எம்.ஏ.,பி.எச்.டி., பல்கலைக்கழக உறுப்பினர் | உறுப்பினர் |

# செந்தமிழ்


தொகுதி : 98
பகுதி : 9
அக்டோபர் 2004

(தோற்றம் 1903)

திங்கள் இதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2035





| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |


ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ.,எம்.ஃபில்., செயலர்

பதிப்பாசிரியர் **இரா. சதாசிவம்** எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை – 1.

# பொருளடக்கம்

இதழ்மணம் 343

புலால் மறுத்தலில் அறவியல் செறிந்த அறிவியல் கருத்துகள் 345

முனைவர். மெ.மெய்யப்பன்

சங்க இலக்கியத்தில் குடும்பம் 350

முனைவர் நிர்மலா மோகன்

தொல்காப்பியத்தில் தமிழகம் 359

முனைவர் பெ.சுயம்பு

தமிழ் வேலி 378

ஈரோடை அருண்மணி

# இதழ்மணம்

பேராசிரியர் முனைவர் மெ.மெய்யப்பன் அருளியலும் அறிவியலும் உண்மையைப் போற்றுவதையே நோக்கமாகக் கொண்டுள்ள செய்தியை திருவள்ளுவரின் கொல்லாமை, புலால் மறுத்தல் ஆகிய இரண்டு அதிகாரங்களைக் கொண்டு அரிதின் முயன்று விளக்கியுள்ளார்.

புலால் உணவுக்காக வளர்க்கப்படும் கால்நடைகளுக்குத் தேவைப்படும் உணவைக்கொண்டு உலகம் முழுவதும் உள்ள மக்களின் பசிப்பிணியைப் போக்கி விடமுடியும் என்ற செய்தி பொருளாதார சமூகச்சிக்கலுக்கு ஒரு நல்ல மருந்தாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

அருளற்ற செயல் அருளற்ற விளைவுகளை ஏற்படுத்தும் என்பது கட்டுரைமுழுவதும் இழையோடி இருப்பது கற்று இன்புறத்தக்கது.

முனைவர் நிர்மலா மோகன் எழுதிய சங்க இலக்கியத்தில் குடும்பம் என்னும் கட்டுரை இந்த இதழில் நிறைவடைகிறது. சங்க இலக்கியத்தில் தலைவனுடைய உறவினர்கள் புறந்தள்ளப்பட்டு தலைவியினுடைய உறவினர்களே இடம்பெற்றிருப்பது ஆணாதிக்கமா? பெண்ணாதிக்கமா? கேள்வி மீள்பார்வைக்குரியது.

பேராசிரியர் முனைவர் பெ.சுயம்புவின் “தொல்காப்பியத்தில் தமிழகம்" என்னும் கட்டுரை இடம் பெறுகிறது. தொல்காப்பியர் தொன்மரபுகளை எடுத்துரைப்பதோடு புதிய வரவையும் முன் மொழிந்துள்ள செய்தியை அவருடைய கட்டுரையில் விரிவாகக் காணலாம். விரிவாகச் சிந்திப்பதற்கு வாசகர்களுக்கு இக்கட்டுரையில் நிறையச் செய்திகள் உள்ளன.

ஈரோடை அருண்மணியில் “தமிழ்வேலி" என்னும் கட்டுரையில் அந்தணர், ஐயர், பார்ப்பார் என்னும் சொற்கள் குறித்த விளக்கம் வாசகர்களின் சிந்தனைக்குரியதாகும்.

செயலற்றுச் சிந்தனையற்றுப் பயனில் வாழ்க்கை வாழ்வது பெரும்பான்மையாகும். சிந்திப்பவர்களும் செயல்படுவதில்லை. நம் செந்தமிழ் இதழைப் பாடிக்கும் வாசகர்கள் இந்த இதழைப் பாதுகாத்து வளர்க்க வேண்டும் என்னும் விருப்பத்தைத் தெரிவிக்கிறார்கள். அதுவே இன்பூட்டும் செயல்.

தமிழ் ஆய்வுக்கட்டுரைகளை ஆசிரியர், மாணவர், தமிழ் ஆர்வலர்கள் அனைவரும் எழுதவும், படிக்கவும் செந்தமிழ் இதழ் கடந்த நூறு ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறது. அமைப்பு வழி நின்று பணிபுரிவதால் நெடிய பயணம் தளர்வின்றி நடக்கிறது. அதனை உணர்ந்து தமிழ்ப் பெருமக்கள் இவ்விதழ் வளர்ச்சிக்கு ஒல்லும் வகையெல்லாம் சிந்தித்து உதவ வேண்டுகின்றேன். தமிழ் அறிஞர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், தமிழ் ஆர்வலர்கள் அனைவரது கையிலும் செந்தமிழ் இதழ் இருத்தல் வேண்டும். அதற்குரிய முயற்சியில் அன்பர்கள் தமிழ்ப்பணியாற்ற வேண்டுகின்றேன்.

## சைவ சித்தாந்தப் பயிற்சி வகுப்பு

காலம் : நவம்பர் 21 முதல் 30 முடிய 10 நாட்கள்

இடம் : தியாகராசர் கல்லூரி, மதுரை - 9.

சிறப்புநிலைப் பேராசிரியர் ஆ.ஆனந்தராசன் தலைமையில் சைவசித்தாந்த அறிஞர்கள் வகுப்பு நடத்துவர்.

வள்ளல் கருமுத்து தி.கண்ணன் உணவு, தங்குமிடம் ஆகிய அனைத்து ஏற்பாடுகளையும் செய்கிறார். விண்ணப்பம் அக்டோபர் திங்களுக்குள் முதல்வர் முனைவர் மு.அருணகிரி அவர்களிடம் வந்து சேரவேண்டும். கட்டணம் ஏதுமில்லை. பயன்பெறுக.

# புலால் மறுத்தலில் அறவியல் செறிந்த அறிவியல் கருத்துகள்

முனைவர். மெ.மெய்யப்பன்

மனிதர்கள் உடல் நலத்திற்கு, மாமிசவகைப் புரோட்டீன்களை விடத் தாவர வகைப் புரோட்டீன்களே மிகவும் அனுகூல மானவை. இதைப் பல அறிஞர்களும், சாதனையாளர்களும் அறிவுறுத்திக் கூறியுள்ளனர்.

“உடல் நலத்திற்குச் சிறந்த பாதுகாப்பும், அதிககாலம் உயிர் வாழ்வதற்கு அதிகவாய்ப்பும், சைவ உணவைத் தவிர வேறெதுவும் பயன் தருவதில்லை”

-அல்பர்ட் ஐன்ஸ்டீன்
(விஞ்ஞானி)

“ஒரு சிறந்த விளையாட்டு வீரனாகத் திகழ, அசைவ உணவிலிருந்து புரோட்டீன்கள் ஒருவருக்கு அவசியமில்லை. உண்மையில் என்னுடைய சாதனைகள் எல்லாம், நான் சைவ உணவுப் பழக்கத்திற்கு மாறிய அந்த ஆண்டு முதலே தொடங்கியன. சைவ உணவால் என்னுடைய உடல் எடையை முழுவதுமாகக் கட்டுப்படுத்தவும் முடிகின்றது.

-காரல் லூயிஸ்
(விளையாட்டு வீரர்)

மாமிச உணவுகளில் கொழுப்புப் பொருள் அதிகமாக இருப்பதால், மாமிசப் புரோட்டீன்களோடு இந்தக்கொழுப்புப் பொருள்களும் தன்மயமாதலின் போது உடலில் சேர்கின்றன. அதனால் தொடர்ந்து மாமிச உணவு உட்கொள்ளும்போது, உயர் இரத்த அழுத்தம், இதயத் தாக்கம் போன்ற நோய்களுக்கு ஆளாகும் வாய்ப்பு கூடுதலாகின்றது. சைவ உணவுகளால் மக்களிடையே புற்றுநோய் (Cancer), இதய நோய்கள், உயர் அழுத்தம், உடல் பருமன் அதிகரிப்பு, இனிப்பு நீர், சிறு நீரகக்கல், பித்தப்பைக்கல் போன்ற கோளாறுகள் குறைந்த வீதத்தில் காணப்படுவதாகக் கண்டறிந்து தெரிவித்துள்ளது.

சைவ உணவில் ‘கொலஸ்ட்ரால்’ என்ற உறையக்கூடிய

கொழுப்பு சிறிதும் இல்லை; கொழுப்பின் அளவு மொத்தத்தில் வெகு குறைவு; தெவிட்டிய கொழுப்பு அதிகமில்லை. பெரு மற்றும் சிறு குடலின் நலனுக்கு அனுகூலமான இழை உணவுப் பொருள்களுக்கு சைவ உணவுகள் மட்டுமே மூலமாயிருக்கின்றன. சத்துக்கள் சிதைவுறாமல் சைவ உணவுகள் மூலமே கிடைக்கின்றன. மாமிச உணவு போல, புற்றுநோய் தூண்டும் மூலப் பொருட்களையும், நச்சுப் பொருட்களையும் தருவதில்லை. ஆக்ஸிஜனேற்றத்தைத் தடுப்பதால், பகுப்பு மூலக் கூறுகள் சீரழிவதும் தடுக்கபட்டு உடல் நலம் பாதுகாக்கப்படுகின்றது. உடல் நலக் கோளாறுகளை நுட்பமாகவும், பின் விளைவுகள் ஏதுமின்றித் திட்பமாகவும் சமன் செய்யத் தேவையான நுண்ணளவு மருந்துப்பொருள்கள் இயல்பாகத் தாவர உணவுகளிலிருந்தே கிடைக்கின்றது.

சத்துணவு வல்லுநர்கள் தங்களுடைய விரிவான ஆராய்ச்சிகளின் மூலம், சைவ உணவுக்கு இணக்கமான கருத்துக்களை எடுத்துரைத்துள்ளனர்.

சோயா புரோட்டீனில் தேவையான அனைத்து அமிலக் கூறுகளும் இருப்பதாகக் கண்டறிந்துள்ளனர். இதுபோன்றதொரு முழுமையான புரோட்டீன் அசைவ உணவினங்களில் காண முடிவதில்லை. எலும்புகளின் வளர்ச்சிக்கும் உறுதிக்கும் உறுதுணையாக விளங்கும் கால்சியம் தாவர உணவு வகைகளிலேயே அதிகம் கிடைக்கின்றது. அதிகமாக இறைச்சியை உணவில் சேர்த்துக்கொள்ளும்போது, கால்சியம் பற்றாக்குறை ஏற்படுகின்றது. மேலும் இந்த சைவ இயக்கங்கள், ஒரு கணக் கீட்டின் அடிப்படையிலும் சைவ உணவின் அவசியத்தை வலியுறுத்தி வருகின்றன.

16 கிலோ விளைச்சல் 16 பேருக்கு உணவாக இருக்க முடியும். ஆனால் இதை இறைச்சிக்காக ஓர் ஆட்டிற்கு உணவாக்கினால் நமக்கு அதனால் 1கிலோ மாமிசம் மட்டுமே கூடுதலாகக் கிடைக்கும். அதாவது மாமிச உணவு என்பது உயரளவுச் சைவ உணவை இழந்து, குறைந்த அளவு அசைவ உணவை பெறுவதால் கிடைப்பதாகும். உணவு உற்பத்தி இருந்தும், உணவுத் தட்டுப்பாடு

ஏற்படுவதற்கு இது மிகவும் முக்கியமான காரணமாகும் என்பதை இவ்வியக்கத்தினர் சுட்டிக் காட்டியுள்ளனர். சைவ உணவுப் பழக்கம் மேற்கொள்ளப்பட்டால், உலகில் உணவுப் பற்றாக்குறை ஏற்பட வழியில்லை என்பதை இவர்கள் இதன் மூலம் சுட்டிக்காட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இவ்வாய்வுக் கருத்துரைகளைத் திருவள்ளுவரின் வார்த்தைகளைக் கொண்டே விளக்க முடியும். உலகில் தோன்றுகின்ற எல்லா உயிர்களும், அவை எவ்வகை உணவுண்பவைகளாக இருந்தாலும் பிறப்பால் ஒன்று என்பார் வள்ளுவர்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" (குறள்:972)

இப்படிப்பட்ட ஒரு கருத்து அறிவியல் வளர்ச்சியில்லாத அந்தக்காலத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது என்றால், அதற்கு ஒருவர் உலகியல் கண்ணோட்டத்தை நுட்பமாகப் பெற்றிருத்தல் வேண்டும். அன்றைக்குத் திருவள்ளுவர் கொண்டிருந்த உலகியல் கண்ணோட்டத்தின் விளைவு, இன்றைக்கு அறிவியல் ஆய்வுகளின் முடிவுகளோடு ஒன்றிணைந்திருக்கின்றது என்று சொன்னால் அது வள்ளுவத்தின் ஆழ்ந்த சமுதாய நோக்குதான்.

மனிதர்கள் ஏன் விலங்கினங்களைக் கொல்லக்கூடாது என்பதற்கான காரணத்தை 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற வரியே தெரிவிக்கின்றது.

மனிதர்கள் எல்லோரும் மறுபிறப்பில் மனிதர்களாகவே பிறக்கப்போகின்றோம் என்று நம்பிக் கொண்டிருக்கின்றார்கள். இதில் கொண்டிருக்கும் ஆழ்ந்த நம்பிக்கையினால், பலர் இளமைக் காலத்தில் காட்டாத ஈடுபாட்டை அந்திக்காலத்தில் அறநெறிகளை அளவுமீறி வெளிப்படுத்துவர். ஆனால் உண்மை நிலை அப்படியில்லை. ஆன்மீகமும், அறிவியலும் மறுபிறப்புப் பற்றி ஒத்த கருத்துகளையே கூறுகின்றன.

மனிதர்கள் மடிந்தாலும், மனித உடம்பில் உள்ள மூலக்கூறுகள் எரிக்கப்பட்டாலும் அழிவதில்லை. மரணத்திற்குப் பின், இந்த மூலக்கூறுகள், தன் மயமாதல் மூலம் உணவுப்பொருளாகி

மீண்டும் பல புதிய உயிரினங்களில் போய்ப்படியும். முன்பு பல உயிரினங்களில் இருந்த மூலக்கூறுகள் உணவு மூலமாக ஒன்று கூடியதால்தான் மனிதன் உருவானான். ஒன்று பலவாவதும், பல ஒன்றாவதும் உயிரினங்களின் இறப்பும் – பிறப்பும் உணர்த்தும் உண்மையாகும்.

இத்தொடர் நிகழ்வில், இப்பிறப்பில் மனிதனாகப் பிறந்தவன், மறுபிறப்பில் பல உயிரினங்களில் போய்ப் படிகின்றான். பயிரினம், பூச்சியினம், பறவையினம், விலங்கினம், நீர் வாழ்வினம் எனப் பல வகையான இனங்களில் உயிர்ப்பித்தெழ வாய்ப்புண்டு. மாணிக்க வாசகர் தனது திருவாசகத்தில் இது பற்றி முன்னுரைக்கும்போது மெய் சிலிர்க்கின்றது.

“புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்து
ளெல்லாப் பிறப்பும்” திருவாசகம்: 1:26-31

இதில் பரிணாமவளர்ச்சியின் அடுத்தடுத்த படிகளாகப் புல், சிறிய செடி, புழு, மரம், மிருகம், பறவை, பாம்பு, கல், மனிதன், கணங்கள், அசுரன், முனிவர், தேவர் எனக்குறிப்பிடப் பட்டிருப்பதைப் பார்க்கின்றோம். இப்பிறப்பில் இறப்பு என்பது மறுபிறப்பிற்கு மூலமாகி புதிய பிறப்பாகின்றது என்ற கருத்தும் இதனுள் பொதிந்து கிடப்பதும் தெரிகின்றது.

மனிதனுடைய ஜன்மத்தின் ஒரு பகுதி, மறு பிறப்பில் ஆடாகப் பிறக்கலாம். மனிதனாக இருந்தபோது உயிர்க் கொலை செய்வதற்கு வருந்தாதவன், மறு பிறப்பில் ஆடாகப் பிறந்தபோது, உயிர்க் கொலைக்கு ஆளாகின்றோமே என்று வருந்துவதால் பயனில்லை. ஏனெனில் எந்த இரக்கம் காட்டப்பட வில்லையோ, அது சாகாத சமுதாயத்தில் மேலும் விரிவடைந்து வேரூன்றி வளர்ந்திருக்கும். அருள் எந்த அளவு காட்டப்படுகின்றதோ, அதே அளவு காட்டப்படும். ஆனால் எந்த அளவு காட்டப்படவில்லையோ, அதைப்போல பல மடங்கு

காட்டப்படுவதில்லை. இக்கருத்தை மனதிற்கொண்டு திருவள்ளுவர் தீட்டிய குறள்:

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்." (குறள்: 260)

சைவத்தால் உடல் நலம் மட்டுமின்றி மனநலமும் பாதிக்கப்படுவதில்லை என்று திருவள்ளுவர் ஒருபடி மேலே போய் கூறியிருக்கின்றார்.

"படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்கா தொன்றன்
உடல்சுவை உண்டார் மனம்." (குறள்: 253)

உணவிற்காக உயிர்க்கொலை செய்வோர், உயிர்க்கொலை செய்வதற்குள்ள அச்சத்தைக் காலப்போக்கில் கைவிட்டுவிடுவர். இது விலங்கினங்களை மட்டுமில்லாது, கருத்து வேறுபாடு கொண்டுள்ள மனிதர்களையும் உயிர்க் கொலை செய்யத்துணிவை ஏற்படுத்திவிடும். உடல் நலத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பாதிப்பதுடன், அறநெறி மீறும் மனப்போக்கைத் தூண்டவும் செய்வதால், புலால் உண்பதைக் கைவிட்டுவிட வேண்டும் என்று இக்குறள் மூலம் மக்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளார் திருவள்ளுவர். அவருடைய நுட்பமான சமுதாயக் கண்ணோட்டத்தின் எல்லையைப் புலால் மறுத்தல் மற்றும் கொல்லாமை அதிகாரங்கள் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது.

முற்றும்.

# சங்க இலக்கியத்தில் குடும்பம்

டாக்டர் நிர்மலா மோகன்
இணைப் பேராசிரியர்
செந்தமிழ் கல்லூரி, மதுரை-1.

தன் மகனுடன் விளையாடிக் கொண்டிருக்கிறான் தலைவன். காதல் மேலீட்டால், மகனை மார்பில் அணைத்து இறுகத் தழுவிக் கொண்டான் அவன். அருகில் அமர்ந்திருந்த மனைவி, அவர்கள் இருவரையும் ஒருங்கே தன் இரு கைகளாலும் அணைத்துக் கொள்கிறாள். அன்பு நிறைந்த இக்காட்சியை மற்றொரு பாடல் அழகுறச் சொல்லோவியமாக்கியுள்ளது:

'புதல்வற் கவைஇயினன் தந்தை; மென்மொழிப்
புதல்வன் தாயோ இருவரும் கவைஇயினள்;
இனிது மன்றஅவர் கிடக்கை;
நனிஇரும் பரப்பின் இவ்வுலகுடன் உறுமே' (ஐங்.409)

குறுந்தொகைப் பாடல் ஒன்றிலும் (குறுந்தொகை 359) இத்தகைய அருமையான காட்சியைக் காணலாம்.

இக்காட்சிகள், 'எவனால் சூழ்நிலையின் காரணமாக இல்லறம் புக இயலாது போய் விடுகிறதோ அவனுடைய ஆன்மாவில் ஒரு மாபெரும் சூன்யம் ஏற்பட்டுவிடுகிறது. அவனுடைய இதயத்தில் நீக்க இயலா ஒருவகைத் துன்பத்தின் சாயல் படிந்து விடுகிறது. அவன் சிறுசிறு இன்பங்களையும் மகிழ்ச்சியையும் ஆறுதலையும் பெறலாம்தான். ஆனால் நிரந்தரமான ஆறுதலை அவனால் பெற இயலாது. ஓர் ஏரியின் அலைமீது காணப்படும் அமைதியை - தாயின் மார்பில் கவலையற்றுப் படுத்துறங்கும் சேயின் முகத்தில் பொலிவுற்றுத் திகழும் அந்த இன்ப அமைதியை அவனால் பெற இயலாது' என்று இத்தாலிய மேதை மாஜினி சொன்ன கருத்தை மெய்ப்பிக்கின்றன.

**தந்தை பெயரன்**

தந்தையின் பெயரை மகனுக்கும், தாயின் பெயரை மகளுக்கும் இடுவது தொன்மையான தமிழ்மரபு. இதனாலேயே பெயரன், பெயர்த்தி என்னும் உறவுச் சொற்கள் உண்டாயின.

இம்மரபைக் காட்டும் வகையில் அமைந்துள்ளது ஒருபாடல்.

மகன் இனிய புன்முறுவலுடன் சிறுதேர் உருட்டித் தளர்நடை பயிலுதலைக் காண்கிறான் தலைவன்; தலைவியின் மீது கொண்டிருந்த அன்புக்குச் சிறிதும் குறைவின்றி மகன் மீதும் பரவிற்று; அதற்குக் காரணம், அவன் தன் அகன்பெரும் சிறப்பின் தந்தையின் பெயரைக் கொண்டிருந்ததே, என்கிறது ஒரு பாடல்:

புணர்ந்த காதலியின் புதல்வன் தலையும்
அமர்ந்த உள்ளம் பெரிது ஆகின்றே
அகன்பெரும் சிறப்பின் தந்தை பெயரன்
முறுவலின் இன்நகை பயிற்றி
சிறுதேர் உருட்டும் தளர்நடை கண்டே (ஐங்.403)

இங்ஙனம் குடும்பத்தின்கண் நிலவும் இயல்பான - நிறைவான - மகிழ்ச்சியை சங்கப்பாடல்கள் பலவற்றிலும் காணலாம்.

**புதல்வன் ஊடல் தணிக்கும் வாயில்**

'பாலாறு தேனாறு பாய்கின்ற ஓட்டத்தில் பல்லொடிக்கச் சிறு கல் அகப்பட்டாற் போல்' (குறவஞ்சி) அன்பு நிறைந்த தலைவன் தலைவியிடையே குறுக்கிடுகிறாள் பரத்தை. சங்க அக இலக்கியங்களில் மருதத் திணையில் அமைந்த பெரும்பான்மையான பாடல்கள், பரத்தமை காரணமாகத் தலைவன் தலைவியரிடையே எழும் ஊடலை எடுத்துரைக்கின்றன. பரத்தைவயிற் பிரிந்து வந்த தலைவனை உடனே வரவேற்று ஏற்றுக்கொண்டு விட மாட்டாள் தலைவி. 'வாயில் மறுத்தல்' துறை இதைத்தான் உணர்த்துகிறது. அள்ளூர் நன்முல்லையாரின் பாடல் ஒன்று, பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகனுக்கு வாயில் மறுத்த செய்தியை மிக அருமையாக எடுத்துரைக்கின்றது.

'முல்லை நிலத்தின்கண் சிறிய இலைகளையுடைய நெருஞ்சி மலர் நெருங்கி முளைத்து கண்ணுக்கு இனிமை பயக்கும்; ஆனால் அதுவே பின்னர் இன்னாமையைச் செய்யும் முள்ளாக மாறிவிடுகின்றது. அதுபோல, முன்பு நமக்கு இனியவற்றைச் செய்து ஒழுகிய நம் தலைவர், இப்பொழுது இன்னாதவற்றைச் செய்து ஒழுகுதலால் என் நெஞ்சு வருந்துகின்றது' என்று தலைவி

கூறுவதாக அமைந்துள்ளது அப்பாடல்.

'நோமென் னெஞ்சே நோமென் னெஞ்சே
புன்புலத் தமன்ற சிறியிலை நெருஞ்சிக்
கட்கின் புதுமலர் முட்பயந் தாஅங்கு
இனிய செய்தநங் காதலர்
இன்னா செய்தல் நோமென் னெஞ்சே' (குறுந். 202)

எனினும், தலைவியின் கோபத்தைத் தணிக்கப் பல வகைகளிலும் முயல்வான் தலைவன். இதனை,

'மனைவி உயர்வும் கிழவோன் பணிவும்
நினையுங் காலைப் புலவியுள் உரிய' (பொருளியல்.நூ.33)

என்னும் தொல்காப்பிய நூற்பா எடுத்துரைக்கின்றது. மேலும் தலைவியின் ஊடலைத் தீர்க்கும் வாயில்களாகத் தாய், தோழி, பார்ப்பான், பாங்கன், பாணன், பாடினி, இளையோர், விருந்தினர், கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர் ஆகிய பன்னிருவரைக் குறிப்பிடுகிறார் தொல்காப்பியர் (கற்பியல், நூ.52)

இங்ஙனம் பன்னிரு வாயில்களைக் கூறிய தொல்காப்பியர், குழந்தையைக் குறிப்பிடவில்லை. எனினும் தலைவி தலைவன் மீது கொண்ட ஊடலை - கோபத்தை - தணிப்பதற்குக் குழந்தை ஒரு *முக்கிய வாயிலாக - காரணமாக* - விளங்குவதைப் பல அகப்பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

பானைச் சோற்றுக்கு பதச் சோறுபோல, குழந்தை ஊடலைத் தீர்க்கும் காரணமாக அமையும் ஓர் அகநானூற்றுப் பாடலைக் காண்போம். பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகனை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தோழி அவன் பொருட்டு வாயிலாக வந்தாள்; தலைவி வாயில் நேர்ந்த கருத்துடன், முன்பு ஒருமுறை தலைவன் செய்த ஒரு செயலை ஒருகதை போல எடுத்துக்கூறுகிறாள்.

'தோழி' மலர் மாலையை அணிந்த மார்பனாகிய நம் தலைவன் நேற்று ஒருத்தியை மணம் செய்து கொள்ள விரும்பினான்; புதிதாகச் செய்த மணக் கோலத்துடன் இத்தெருவினையும் கடந்து சென்றான். அப்போது, அவனது தேர்க் குதிரையின் மணி ஒலித்தது. அவ்வோசையைக் கேட்ட என் புதல்வன்

தளர்நடையிட்டுத் தலைவாயிலுக்குச் சென்றான்; மலர் போன்ற கண்களை உடைய அப் புதல்வனைக் கண்டபின் தலைவன்; தேரை நிறுத்தச் சொல்லித் தேரினின்றும் இறங்கினான். காலந் தாழ்த்தாது மகனின் பவளம் போன்ற சிவந்த வாய். தம் மார்பகத்தைப் பொருந்தத் தழுவினான். 'பெரும' இனி நீ வீட்டிற்குச் செல்வாயாக என விடுத்தான்; புதல்வன் அதற்கு உடன்படாது அழுதான்; அங்ஙனம் அழுது தடுத்த மகனோடு 'இவன் பேரனும் ஆவான்' எனக் கூறி வீட்டுக்குள் வந்தான்.

'இச் செயலை நான் தான் செய்தேன்' எனத் தலைவனும், மற்றவரும் எண்ணுவதற்கு இடமாதலை நினைத்தேன்; நாணினேன். இக்கொடியவன் இந்தப் புது மணமகன் செயலை இடையூறு செய்து கலக்கிவிட்டான் போலும்! என்று கடிந்து கூறி அம்மகனை அடிப்பதற்குக் கோலுடன் அணுகினேன். அப்போது அவர் மகனைத் தம்பால் அணைத்துக் கொண்டார்.

மணம் நிகழும் அப்பெண்டிரின் மனையின்கண் முடிவின் இனிய ஓசை ஒலித்தது. அவ்வோசை அத்தலைவனை அழைப்பதைப்போல முழங்கிற்று. முன்பொரு நாள் நாம் கழங்கு ஆடும் தோழியர் கூட்டத்தினின்று நீங்கி அவனை முதன்முதலாகக் கண்டபோது, நம்மைத்தேற்றி அருள் செய்தற்காகக் கூறிய சூளுரை தன் மனத்தில் தோன்றிச் சுட்டதால், அவன் தான் விரும்பிய மணத்தையும் மேற்கொள்ளாமல் கைவிட்டான் அல்லனோ? எனத் தலைவி தோழியிடம் எடுத்துரைக்கின்றாள்.

புதல்வன் மீது தலைவன் கொண்ட அன்பு அவன் புறப்பெண்டிரை மணப்பதைத் தடை செய்து, தலைவியுடன் ஒன்று கூட்டுவித்த செய்தியை இப்பாடல் மிக அருமையாக எடுத்துரைக்கிறது.

'நிரைதார் மார்பன் நெருநல் ஒருத்தியொடு
வதுவை அயர்தல் வேண்டி புதுவதின்
இயன்ற அணியன், இத்தெரு இறப்போன்
மாண்தொழில் மாமணி கறங்க, கடைகழிந்து
காண்டல் விருப்பொடு தளர்புதளர்பு ஓடும்
பூங்கண் புதல்வனை நோக்கி, 'நெடுந்தேர்

தாங்குமதி வலவ! என்று இழிந்தனன். தாங்காது
மணிபுரை செவ்வாய் மார்பகம் சிவணப்
புல்லி, பெரும செல்இனி அகத்து எனக்
கொடுப்போற்கு ஒல்லான் கலுழ்தலின், தடுத்த
மாநிதிக் கிழவனும் போன்ம் என மகனொடு
தானே புகுதந் தோனே! யான்அது
படுத்தனென் ஆகுதல் நாணி இடித்து இவற்
கலக்கினன் போலும் இக்கொடியோன் எனச்சென்று
அலைக்கும் கோலொடு குறுக, தலைக்கொண்டு
இமிழ்கண் முழவின் இன்சீர் அவர்மனைப்
பயிர்வன போலவந்து இசைப்பவும், தவிரான்,
கழங்கு ஆடு ஆயத்து அன்றுநம் அருளிய
பழங்கண் ணோட்டமும் நலிய,
அழுங்கினன் அல்லனோ, அயர்ந்ததன் மணனே

- அகம்.66

**விருந்தறம் பேணுதல்**

விருந்தினரைப் பேணுவதை சிறந்த இல்லறப் பண்பாகப் போற்றினர் பண்டைத் தமிழர். 'அல்லிலாயினும் விருந்து வரின் உவக்கும்; இரவு கதவடைக்கும்முன் விருந்தினர் உள்ளீரோ?' எனக்கேட்டுக் கதவடைத்தனர் என வரும் செய்திகள் இதனை உணர்த்தும்.

வினையை முடித்த தலைவன், பாகன் ஓட்டத் தேரில் வேகமாக வருகின்றான். வீடு வந்துவிட்டது இறங்குக என்று பாகன் சொல்லும்போது தலைவன். 'இவ்வளவு விரைவாக எப்படி வந்தாய்? காற்றையே குதிரையாகப் பூட்டினாயா? உன் மனதைக் குதிரையாகப் பூட்டினாயா?' என மனமாரப் பாராட்டி, அவனைத் தன் மார்போடு தழுவிக் கொண்டு தன் மனைக்குள் புகுந்தான். மனைவியோ. தேர்ப்பாகனையும் வரவேற்று விருந்து பெற்றேன் என்று மகிழ்கிறாள். இக்காட்சியை,

'வான்வழங்கு இயற்கை வளிபூட் டினையோ
மான்உரு வாகநின் மனம்பூட் டினையோ
உரைமதி வாழியோ வலவ எனத்தன்
வரைமருள் மார்பின் அளிப்பனன் முயங்கி

மனைக்கொண்டு புக்கனன் நெடுந்தகை
விருந்தேர் பெற்றனள் திருந்திழையோளே' (அகம்.384)

என்னும் அகநானூற்றுப் பாடல் வரிகள் எடுத்துக்காட்டுகின்றன. தேரோட்டி தானே என்று எண்ணாது. அவனையும் நல்விருந்தாக மதித்துப்போற்றிய தலைவியின் பண்பை இப்பாடல் எடுத்துக்காட்டுகிறது.

விருந்து பேணுவதிலும் ஒருமுறை இருக்கின்றது. தலைவி தலைவனைப் பிரிந்து வாழும் சூழலில் விருந்தினரைப் பேணாள். தலைவியும் தலைவனும் சேர்ந்து தான் விருந்தினரைப் பேண வேண்டும் என்ற நெறிமுறை அக்காலத்தில் இருந்தது. இதைத்தான் சிலப்பதிகாரக் கண்ணகியும், கோவலனிடம் சுட்டிக் காட்டுகிறாள்;

'அறவோர்க்களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை'

இராமனைப்பிரிந்து அசோகவனத்தில் சிறை இருந்த சீதையும், விருந்தினர் வந்தால் என்னபாடுபடுவானோ இராமன் எனத் துயர் அடைகின்றாள்;

'அருந்தும் மெல்அடகு ஆரிட அருந்தும் என்று அழுங்கும்
விருந்து கண்டபோது என்னுறுமோ என்று விம்மும்
மருந்தும் உண்டுகொல் யான்கொண்ட நோய்க்கென்று மயங்கும்
இருந்த மாநிலம் செல்லரித்து எழவும் ஆண்டு எழாதாள்'

எனக் கம்பரும் இப்பண்பைச் சுட்டிச் சொல்கிறார்.

**விருந்தினர் வர ஊடல் தணியும்**

தலைவன் மேல் ஊடல் கொண்ட தலைவி முகம் திரிந்து நோக்குவாள். விருந்தினர் வரின் முகம் திரிதல் பண்பன்று ஆதலின் புன்னகையோடு நோக்குவாள். அதனால் ஊடல் தீர்வாள் என்பதால், தலைவன், தலைவியின் ஊடலைத் தீர்க்க விருந்தினரோடு வருவதைப்பல அகப்பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

தலைவன் மீது கோபம் கொண்ட நிலையிலும், தான் விரும்பாத நிலையிலும், தன் எண்ணத்தைப் புறந்தள்ளி விருந்தினரைப்

பேணுவதைத் தம் கடமையாகக் கொண்டாள் என்பதை மாங்குடி கிழாரின் நற்றிணைப் பாடல் ஒன்று எடுத்துரைக்கின்றது.

'வாளை மீனைத் தன் விரல்கள் சிவக்க அரிந்து, அதைப் பக்குவப்படுத்தி, சமைக்கத் தொடங்குகிறாள் தலைவி, புகையால் அவள் கண்கள் சிவக்கின்றன; நெற்றியில் அரும்பும் வியர்வையைத் தன் துகிலால் துடைத்துக்கொண்டு சமைப்பதற்குக் காரணம், இவ்விருந்தினன் தானே' என்று மனதில் மகிழ்ச்சிகொள்ளும் தலைவனை இப்பாடல் எடுத்துக்காட்டுகின்றது;

'................ செழுஞ்செய் பேழை
சிறுதாழ் செறித்த மெல்விரல் சேப்ப
வாளை ஈர்ந்தடி வல்லிதின் வகைஇ
புகைஉண்டு அமர்த்த கண்ணள், தகை பெறப்
பிறைநுதல் பொறித்த சிறுநுண் பல்வியர்
அம்துகில் தலையில் துடையினள், நப்புலந்து
அட்டிலோளே; அம்மா அரிவை
எமக்கே வருகதில் விருந்தே! சிவப்புஆன்று
சிறுமுள் எயிறு தோன்ற
முறுவல் கொண்ட முகம்காண் கம்மே' (நற்றிணை.120)

## இக்கட்டுரை உணர்த்தும் சில உண்மைகள்

1. சங்க காலச் சமுதாயத்தில் காதல் திருமணம், பெற்றோர் கொடுப்பக் கொள்ளும் நிச்சயிக்கப்பட்ட திருமணம் ஆகிய இரண்டு முறைகளும் நிலவின. கணவன் - மனைவி என்னும் உரிமை திருமணத்தால் மட்டுமே கிடைக்கக்கூடியது. உடன்போக்கு மேற்கொண்டு சென்றாலும் கரணம் என்னும் வதுவைச் சடங்கு கட்டாயம் நடைபெறவேண்டும் என வற்புறுத்தப்பட்டது.

2. குடும்பம் என்றால் தலைவன் - தலைவி, அவர்தம் குழந்தைகள் என்று அமையும் தனித்தனிக் குடும்ப நிலையையே காணமுடிகின்றது. கூட்டுக்குடும்பமாக வாழும் நிலை சங்க இலக்கியத்தில் கூறப்படவில்லை.

3. தலைவியின் உற்றார் உறவினர்களாகிய நற்றாய், தந்தை.

அண்ணன்மார், தலைவியை வளர்த்த செவிலி, அவள் மகளாக விளங்கும் தோழி ஆகியோரைப் பற்றிச் சுட்டும் சங்க இலக்கியம், தலைவனது தாயைத் தவிரப் பிற உற்றார் உறவினரைச் சுட்டிக் காட்டவில்லை. 'நிரயம் செல்இயரோ மகன்தாய்' என வரும் நற்றிணைப் பாடல்வரி, தலைவனது தாயையும் எடுத்து மொழி மாந்தராகவே சுட்டிக்காட்டுகின்றது.

4. திருமணத்திற்குப்பின் தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு, ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து, ஒருவரையொருவர் பொறுத்துக்கொண்டு அன்பு நிறைந்த குடும்ப வாழ்க்கையை மேற்கொண்டனர். 'வதுவை நாளினும் இனிய'னாக விளங்கும் தலைவனையும், கணவனுக்காக எத்தகைய துன்பத்தையும் தாங்கிக்கொள்ளும் தலைவியையும் சங்க இலக்கியம் படம்பிடித்துக்காட்டுகின்றது.

5. திருமணத்திற்குப் பின்னர் தலைவியும் தலைவனும் குடும்பம் நடத்தும் சிறப்பினைக் காண்பதற்குச் செவிலித்தாய் அடிக்கடி அவர்கள் இல்லம் செல்வது வழக்கம். தலைவன் - தலைவியரது இல்வாழ்க்கையைக் காண்பதும், கணவனொடு மாறுபட்ட குறிப்புப் புலப்பட்டால், நேர்படுத்துவதுமே அவளது நோக்கம். இந்நிலை குழந்தை பிறந்த பின்னரும் நீடிப்பதையும் அறிய முடிகின்றது.

6. செல்வச் செழிப்பில் வளர்ந்தவளாயினும், திருமணத்திற்குப் பின், தலைவி, தலைவனுக்கேற்றவாறு வாழும் மன முதிர்ச்சியினை, மனப் பக்குவத்தைப் பெற்றுள்ளாள். வறுமை மிக்க சூழலிலும், தன் தந்தையின் செல்வத்தை விரும்பாத தன்மையை - தலைவனுக்காகவே துன்பங்களைத் தாங்கிக் கொள்ளும் சிறப்பினை - இல்லற மாண்பை விட்டுக் கொடுக்காத இயல்பினை - அவளது மனமாற்றத்தினை - மனப்பக்குவத்தை - சங்க இலக்கியங்களில் காண முடிகின்றது.

7. திருமணம் ஆன புதிதில், இனிமையானவனாக விளங்கிய தலைவன், பரத்தமை ஒழுக்கம் பூண்டவனாய்த் திரிந்தலையும் நிலையினையும் காண்கிறோம். எனினும், அதைப் பொறுத்துக் கொண்டு, குழந்தைகளின் நிலைக்காக அவனை ஏற்றுக்கொள்ள வேண்டிய கடப்பாடு தலைவிக்கு நேர்தலையும் சங்க இலக்கியம்

எடுத்துரைக்கிறது. இப்பிறவியில் இல்லாவிடினும் மறு பிறவியிலாவது தலைவனது நெஞ்சம் விரும்புபவளாகத் தான் அமைய வேண்டும் என்னும் தலைவியின் விருப்பம் அவளது ஆற்றாமையினைக் காட்டுகின்றது. 'முல்லை சான்ற கற்பு' எனக் கூறப்படும் கற்புநிலை, அதன் வன்மை, திண்மை யாவும் தலைவிக்கேயன்றித் தலைவனுக்கு இல்லை. எனினும் குழந்தை பெறும் உரிமை குடியை விளங்க வைக்கும் உரிமை மட்டும் தலைவிக்கே உரியது. பரத்தைக்கு அவ்வுரிமை இல்லை.

8. குழந்தைக்குத் தலைவனது தந்தையின் பெயரையோ, தாயின் பெயரையோ இடும் வழக்கத்தை சங்க இலக்கியம் சுட்டிக்காட்டுகின்றது.

9. பரத்தமை காரணமாகத் தலைவன் தலைவியருக்கிடையே ஏற்படும் ஊடலைத் தீர்க்கத் தாய், தோழி, பார்ப்பான், பாங்கன் போன்ற பன்னிரு வாயில்களைத் தொல்காப்பியர் எடுத்துரைக்கின்றார். எனினும் அவ்வூடலைத் தீர்க்கும் வாயிலாக - கருவியாகக் குழந்தையும் அமைவதைப் பல பாடல்கள் எடுத்துரைக்கின்றன. தொல்காப்பியர் காலத்திினின்றும் ஏற்பட்ட வளர்ச்சி நிலையாக இதனைக் கொள்ளலாம். எனினும் புதல்வன் காரணமாக ஊடல் தீர்வது இயல்பானதாகவும் இன்பம் அளிப்பதாகவும் உள்ளது.

10. புதல்வன், பெயரன், மகன், மைந்தன் என்னும் சொற்கள் தான் சங்க இலக்கியத்தில் இடம் பெறுகின்றன. புதல்வி, பெயர்த்தி, மகள், தங்கை பற்றி ஒரு பாடலில் கூடக் கூறப்படவில்லை. 'உன் அக்கா' எனப் பொருள்படும் 'நுவ்வை' என்னும் சொல் ஒரு பாடலில் இடம்பெற்றுள்ளது. 'நும்மினும் சிறந்தது நுவ்வையாகுமென்று, அன்னை கூறினள் புன்னையது சிறப்பே' என்னும் பாடல்வரிகள் புன்னை மரத்தினைக் காட்டி, 'இது உன் அக்கா' என்று அறிமுகப்படுத்தினாள் தலைவியின் தாய் என்னும் குறிப்பு இடம் பெறுகின்றது. எனவே, இங்ஙனம் வரும் சான்றுகள் எல்லாம் ஆணை முன்னிறுத்திய சமுதாயத்தையே ஆணாதிக்கச் சமுதாயத்தையே காட்டுகின்றன எனலாம்.

# தொல்காப்பியத்தில் தமிழகம்

முனைவர் பெ.சுயம்பு
தமிழ் இணைப்பேராசிரியர் ஆதித்தனார் கல்லூரி
திருச்செந்தூர் - 628 216.

## இலக்கியமும் பண்பாடும்

தொல்காப்பியம் தமிழர்களின் தொன்மரபினைப் பேணிப் பாதுகாக்கின்ற அரிய அறிவுப் பெட்டகமாகும். இது சிறந்த முழுமையான மொழியமைப்பை விவரிக்கின்ற இலக்கண நூல் என்று பொதுவாகப் பேசப்படுகிறது. எனினும் இதன்கண் தமிழ்களின் தொன்மையான வாழ்வியல் - பண்பாட்டு மரபுகளின் குறிப்புக்களும் சுவடுகளும் நிறைய இடம் பெற்றுள்ளன. இந்நூல் தமிழ் இலக்கிய மரபினைப் புலப்படுத்தும் நோக்கம் உடையது. இந்நோக்கமே இந்நூல் எழுதுதற்கு முதன்மைக் காரணமாகும். எனவே இலக்கியத்தின் பாடுபொருளை விவரிப்பதற்குக் கருவியாக உள்ள பண்பாடுகளை எடுத்துரைப்பது தொல்காப்பியருக்குத் தவிர்க்கவியலாததாயிற்று.

இலக்கியத்தின் பாடுபொருள் எனப்படும் பாவிகம் அல்லது கரு பலவரிகளைக் கொண்ட பாடலாகவோ பலபாடல்களைக் கொண்ட காவியமாகவோ உருவாதற்குக் கவிஞர்கள் எடுத்தாளுகிற இலக்கிய உத்திகளுள் அவ்விலக்கியத்தின் பிறந்த மண்ணுக்கான பண்பாட்டுக்கூறுகள் முதன்மையாக அமைகின்றன. இவையே ஓரிரு அடிகளில் சொல்லி முடிக்கத் தகுந்த பாடுபொருளைப் பேரளவில் நீட்டிச் செல்லுதற்கு உடல் போன்று அமைகின்றன. எனவே மக்கள் வாழ்வியலும் அதனைச் சார்ந்த பண்புகளும் பாடுகளும் (நிகழ்ச்சிகளும்) இலக்கியத்திற்கு இலக்கணம் எழுதுகிற புலவனால் கைவிடவியலாதன ஆகின்றன.

தொல்காப்பியத்தில் பல பண்பாட்டுக்கூறுகள் காணப்படுகின்றன. இவற்றைத் தொல்காப்பியம் எழுதப்பட்ட காலத்தில் தமிழகத்தில் வழக்கில் இருந்தவை எனக் கொள்வதினும், அந்நூல் எழுதப்பட்ட காலத்தில் தழுவப்பட்ட

இலக்கிய மரபுகள் என்றே கொள்ளலாம். ஏனெனில் தொல்காப்பியம் தன் கால வழக்கினை விவரிப்பதினும், ஏற்கெனவே இலக்கிய - இலக்கண அறிஞர்கள் பின்பற்றி வருகின்ற தொன்மரபினை விவரிப்பதிலேயே பெரிதும் அக்கறை காட்டுகிறது. இதனைத் தொல்காப்பியம் முழுவதிலுமாகப் பரவலாகக் காணலாம். இவ்வாறு கூறுவதனால் தொல்காப்பியச் செய்திகள் முழுவதுமே தொன்மையானவற்றை வழிமொழியப் பட்டவை என்பது பொருள் அல்ல; புதிய செய்திகளும் காணப்படுகின்றன. இவை தொல்காப்பியர் காலத்து வழக்குகளாக இருக்கலாம்.

தொல்காப்பியத்தில் விவரிக்கப்பட்டுள்ள செய்திகளுள் சமூக அமைப்பு, குடும்ப நிலை, ஆண்-பெண் உறவு நிலை அல்லது தரநிலை, அரசியல் அமைப்பு, பொருளியல் ஏற்றத் தாழ்வு, சமநிலை, நம்பிக்கைகள், இலக்கியம் போல்வன பற்றிய குறிப்புகள் பல இடம் பெற்றுள்ளன. இவை யாவும் தொல்காப்பியம் விவரிக்கிற தமிழக வாழ்வியலாகக் கொள்ளத்தக்கவை.

## சமூக அமைப்பு

தொல்காப்பியச் சமூக அமைப்பு பல்வேறு இனக்குழுக்களும் வருணாசிரம அமைப்பும் உடையதாகக் காணப்படுகிறது. ஆயர், வேட்டுவர், பாணர், கூத்தர், விறலியர், அறிவர், சூதர் போன்றவர்கள் செய்தொழில் அடிப்படையில் அமைந்த இனக்குழுவினராவர். அந்தணர் அல்லது பார்ப்பனர் அரசர் வாணிகர், வேளாளர் நால்வரும் வடஇந்திய வருணாச்சிரம அடிப்படையிலான இனத்தவர்கள். இவர்களுள் பார்ப்பனர்கள் அறுவகைத் தொழில்களையும், அரசர்கள் ஐவகைத் தொழில்களையும் உரிமையாகப் பெற்றிருந்தனர். ஏனைய வாணிகரும் வேளாளரும் ஆறுவகைத் தொழில்களைச் செய்வாராயினர். இந்நால்வகை வருணத்தவர்களையும் குறித்துத் தொல்காப்பியம்,

அறுவகைப் பட்ட பார்ப்பனர் பக்கமும்
ஐவகை மரபின் அரசர் பக்கமும்
இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும் (பொருள்:74)

என்று கூறுகிறது. இவர்களின் தொழில்களை இளம்பூரணர் பின்வருமாறு விவரிக்கிறார்.

பார்ப்பனர் - ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல்.
அரசர் - ஓதல், வேட்டல், ஈதல், படைவழங்குதல், குடியோம்புதல்.
வாணிகர் - ஓதல், வேட்டல், ஈதல், உழவு, வாணிகம், ஆநிரை ஓம்புதல்.
வேளாளர் - உழவு, பிறதொழில்கள், விருந்தோம்புதல், பகடுகளைக் காத்தல், வழிபடுதல், வேதம் அல்லாத கல்வி.

இளம்பூரணரின் கருத்து வடஇந்திய வருணாச்சிரம அடிப்படையிலான விளக்கமாகக் காணப்படுகிறது. இதனை ஏற்கும் வகையில் தொல்காப்பிய நூற்பா அமைப்பும் காணப்படுகிறது.

நாட்டை ஆளுதல் அரசர்க்கு ஒதுக்கப்பட்ட உரிமைத் தொழிலாகும். எனினும் பார்ப்பனருக்கு இத்தொழிலை ஏற்பதற்குச் சிறப்புச் சலுகை வழங்கப்பட்டிருந்தது. இதனை,

அந்தணாளர்க் கரசு வரைவு இன்றே
என்னும் (பொருள்: 627) நூற்பாவில் காணமுடிகிறது.

பார்ப்பனர் முதலிய நால்வர்களுக்குள்ளும் தரவேறுபாடு எதனையும் தொல்காப்பியம் சுட்டவில்லை. ஒரு பெண் தன் கணவனுடன் கொண்ட ஊடலைத் தணிவிக்கிற வாயில்களாகப் பார்ப்பனர், பாணர், விறலி, கூத்தர் போன்றோரை இந்நூல் பட்டியலிடுகிறது. இதன்வழி இவ்வினத்தவருக்கு இடையே தீண்டாமைக் கொடுமை என்று கூறுமளவுக்கு வேறுபாடு இடம்பெற்றிருக்கவில்லை என்பதை உய்த்துணர முடிகிறது. எனினும் செய்கிற தொழிலில் ஏற்றம், தாழ்வு இருக்க வாய்ப்பு அமைகிறது. இதன் காரணமாகச் சமூக அமைப்பில் ஏற்றத்தாழ்வு இருந்திருக்க வேண்டும். பார்ப்பனர், அரசர், வாணிகர், வேளாளர் நால்வருள்ளும் பார்ப்பனர் மிக உயர்ந்த மதிப்பையும் சலுகைகளையும் துய்த்துவந்தனர். அவர்களுக்கு அடுத்த இடம்

அரசர்களுக்கானது. வாழ்க்கைக்கு அடிப்படையான தேவைகளை உண்டாக்குகிற வேளாளர்கள் கடைசித் தரத்திற்குத் தள்ளப்பட்டிருந்தனர் எனக்கொள்ளலாம்.

தொல்காப்பியத்தில் விவரிக்கப்பட்டிருக்கிற சமூக அமைப்பு வருணாச்சிரம அமைப்பினை நினைவூட்டுவதாக உள்ளது.

## மணவுறவும் குடும்பமும்

மனித சமூகத்தில் குடும்பம் அடிப்படை அலகாக உள்ளது. கணவன், மனைவி, மக்கள் என்போர் இதில் அக அலகுகள் ஆவர்.

குடும்ப அமைப்பு மண உறவு வாயிலாக நிகழ்கிறது. இம்மணம் தொல்காப்பியத் தமிழகத்தில் இருநிலைகளில் நடைபெற்றது. ஒன்று களவு மணம், மற்றொன்று கற்பு மணம்.

ஒருவனும் ஒருத்தியும் அன்பால் இணைந்து, காதல் கொண்டு மணந்து கொள்வது களவு மணமாகும். இவ்வகை மணத்தினைச் சமூகம் தயக்கமின்றி ஏற்றுக்கொள்ளவில்லை. அறிமுகமாகாத இருவர் அவர்களது குடும்பநிலை, சமூகத்தரநிலை போன்றவற்றை அறிந்திராத இருவர் காம உணர்வு காரணமாகப் பழகி, மணம் புரிந்து வாழ்வதில் பல இடர்ப்பாடுகள் உருவானதே இதற்குக் காரணமாகும். இந்த மணத்திற்குச் சமூகத்தில் மதிப்பும் அங்கீகாரமும் தரப்படவில்லை. சமூகத்தின் பார்வைக்கு அப்பால் இது நிகழ்கின்றமையால், இதற்குச் சமூகத்தின் பாதுகாப்பு கிடைக்கவில்லை. எனவே மண உறவில் கணவன், மனைவியருக்கு இடையே விரிசல் ஏற்பட்டு ஒருவரை மற்றவர் பிரிந்து செல்வதற்கும் வாய்ப்பு மிகுதி. மேலும், உடல் இன்பத்தைத் துய்த்ததோடு அமைந்து, மண உறவு கொள்ளாமலேயே காதலில் முறிவு ஏற்படுகிற அவலத்திற்கும் இதில் இடம் உளது.

சமூகம் ஒப்புக்கொள்ளாததால் ஆண்-பெண்களின் காதல் உறவு களவு என்று முத்திரை குத்தப்பட்டு ஒதுக்கப்படலாயிற்று.

களவு மணம் முன்னாளில் பேரளவில் இருந்து, பின்னர் நலிவுற்றிருக்க வேண்டும் என்று தொல்காப்பியம் கருதுகிறது. இதனாலேயே இந்நூல் (பொருள். 143)

பொய்யும் வழுவும் கலந்த பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப

என்று கூற வேண்டியதாயிற்று.

தொல்காப்பியம் மணத்தையே கரணம் என்று குறிப்பிடுகிறது.

ஆண், பெண் இருவரின் குடும்பத்தினரும் உறவினருமாகிய பெரியோரால் ஏற்பாடு செய்யப்பெற்று, அவர்களின் முன்னிலையில் நடத்தப் பெற்றதால் இம்மணத்திற்குச் சமூகத்தின் அங்கீகாரம் தாராளமாகத்தானே கிடைப்பதாயிற்று. இது வெளிப்படையான உறவு உருவாக்கம். எனவே இதனைக் கற்பு என்று குறிப்பிடலாயினர்.

கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வது.
(பொருள்.140)

'கொளற்குரி மரபின்', 'கொடைக்குரி மரபினோர்' என்னும் சொல்லாட்சிகள் மண உறவு இன வரையறையின்றி நடைபெற வில்லை. ஒரு குறிப்பிட்ட இனத்தவருக்குள்ளேயே நடைபெற்றது என்பதனை உணர்த்துகிறது. இனம் மட்டுமன்றி, செல்வம், குடும்பத்தரநிலை போன்றனவும் மணவுறவில் உற்றுநோக்கப் பட்டன. இதனை,

பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு
உருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே

என்னும் நூற்பாவால் (பொருள்.269) அறிய முடிகிறது. மேலும், ஒரு குறிப்பிட்ட உறவு முறையினருக்கு இடையே பெரும்பான்மையும் மணவுறவு அமைந்திருக்க வேண்டும் என்றும் கருதலாம்.

காதலித்து இல்வாழ்க்கையுள் நுழைந்தவர்கள் ஊரறிய மணவிழா நடத்திய நிகழ்ச்சியும் நடந்திருக்கிறது. உறவுனர், ஊராரின் எதிர்ப்புக் காரணமாகக் காதலியைக் காதலன்

அழைத்துக்கொண்டு வேற்றிடம் செல்வது உடன்போக்கு எனப்படும். இவ்வுடன்போக்கின்படி தாங்களே இல்வாழ்க்கையினை அமைத்துக் கொண்டவர்களும் உண்டு. இதற்கு மாறாக, உறவினர்களைத் தக்கோர் வாயிலாக அமைதிப்படுத்தி, அவர்களின் ஒப்புதலுடன் மணம் செய்து கொண்டவர்களும் இருந்தனர். இதனை,

கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே
புணர்ந்துடன் போகிய காலை யான
என்று தொல்காப்பியம் (பொருள்.141) குறிப்பிடுகிறது.

தொல்காப்பியக் காலத்திலும் அதற்கு முன்னோடியான இலக்கண நூல்களின் காலத்திலும் கற்பு மணமே பெருவழக்கில் இருந்தது; களவு மணம் அருகியே நிகழ்ந்திருக்கவேண்டும். எனினும், களவு மணத்திற்கு உரிய முன்னேற்பாடாகிய காதல் ஒழுக்கம் குறித்து மிகுதியாக இந்நூல் விவரிப்பது, இலக்கிய வழக்குப் பற்றியதாகும். இலக்கியங்களிலும் நாடகங்களிலும் களவு ஒழுக்கம் பரந்த இடத்தைப் பெற்றிருந்தது.

தொல்காப்பியத்தின் குடும்பம் ஒரு *'மாதிரி அமைப்பு'* ஆகும். கல்வி, செல்வம், குடிப்பெருமை என எல்லா நலங்களும் ஒருங்கே பெற்ற செழுமையான குடும்பத்தையே தொல்காப்பியம் விவரிக்கிறது. இக்குடும்பத்தில் தந்தை, தாய், மகன், மகள் என்ற உறுப்பினர்கள் மட்டுமன்றி, செவிலித்தாய், தோழி, அடித்தொழிலாளர்கள் போன்றோரையும் அறிய முடிகிறது.

செவிலி வளர்ப்புத் தாய். அவளது மகளே குடும்பத்து மகளுக்கு உயிர்க்குயிரானதோழி.

தாய் அல்லது மனைவியே குடும்பத்தின் பெருமைக்கும் விரிவான உறவு வளர்ச்சிக்கும் வேராகக் காணப்படுகிறாள். கற்புடைமை, காமமேம்பாட்டினால் கணவனை மகிழ்வித்தல், நல்லொழுக்கம், மென்மையான பண்புகள் அவற்றால் அமையும் பொறுமை, நிறை (குடும்பப் பிரச்சினைகளை அயலாருக்குப் பறைசாற்றாமை) விருந்தினர்களை முகமலர்ச்சியுடன் பேணுதல், சுற்றத்தினரைப் பிளவுபடாது உதவி செய்து அரவணைத்தல் போன்ற பண்புகள் அவளை இத்தகைய பெருமைக்கு

உரியவளாக்குகின்றன.

கற்பும் காமமும் நற்பா லொழுக்கமும்
மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்து புறம்தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்
தொல்காப்பியத்தில் (பொருள். 150) கூறப்படுகின்றன.

## ஆண்மையும், பெண்மையும்

குடும்ப உறுப்பினர்களுள் மனைவியை விடவும் கணவனே உரிமை மிகுதி பெற்றவனாகக் காணப்படுகிறான். பிறப்பு, குடிமை, வயது போன்றவற்றில் அவன் மனைவியை விடவும் உயர்ந்தவனாக இருப்பினும் தவறாகாது.

"மிக்கோன் ஆயினும் கடிவரை வின்றே" என்னும் கூற்று (பொருள்.90) உரிமை ஏற்றத் தாழ்வை ஒட்டி அமைந்ததே.

குடும்பத்தலைவனாகக் கணவன் ஏற்கப்பெற்றமையால், இவ்வேற்றத்தாழ்வு பொருண்மை நிறைந்ததாகவே கருதப்படுகிறது. எனினும் இது அந்நாளைய ஆணாதிக்கச் சமூகத்தின் வெளிப்பாடுதான்.

மனைவி தன்னையும் தான் பிறந்த குடும்பத்தையும் புகழ்ந்து கூறுதல் இல்லை; அவள் கணவனை எதிர்த்துப் பேசுதல் இல்லை என்பன போன்ற பண்புகள் ஆண்மையை விடவும் பெண்மைக்குச் சமூகம் குறைவான தரத்தையே அளித்திருந்தது என்பதையே காட்கின்றன. எவ்வாறாயினும், இப்பண்புகளே மனைவியைக் குடும்ப அமைப்பைச் சீர்குலையாது காப்பாற்று கிறவள் என்ற உயர்ந்த பாராட்டுக்கு உரியவளாக ஆக்குகின்றன.

தொல்காப்பிய மனைவி வெறும் அடிமையாக மட்டுமன்றி, வாய்ப்பு அமையும்போது கணவனை எதிர்த்துப் பேசி, அவனை இடித்துரைப்பவளாகவும் காணப்படுகிறாள். கணவன் பரத்தையரை நாடும்போது, மனைவி பரத்தையரின் இழிவையும் அதற்கு மாறான தனது உயர்வான புகழ்ச்சிக்கு உரிய பண்புகள், குடும்பப் பெருமைகள் போல்வனவற்றையும் சுட்டிக் காட்டத் தவறுதல் இல்லை.

தற்புகழ் கிளவி கிழவன்முன் கிளத்தல்
எத்திறத் தானும் கிழத்திக் கில்லை
முற்பட வகுத்த இரண்டலங் கடையே (பொருள். 178)

கணவனின் பரத்தமை ஒழுக்கம் முதலிய தவறுகளைச் சுட்டிக்காட்டி, அவள் அவனிடம் பிணங்கி ஊடல் கொள்ளும் போது,

ஏனது சுவைப்பினும் நீகை தொட்டது
வானோர் அமிழ்தம் புரையுமால் எமக்கு (பொருள். 144)

என்று புகழ்ந்துரைப்பதோடு அமையாது, அவளது அடிகளில் வீழ்ந்து (பொருள். 145) கெஞ்சுவதும் காமப்பசியைத் தீர்க்கும் வேட்கை காரணமாகக் கணவன் மேற்கொள்ளும் செயல்களே. எனினும் மனைவியைக் கைவிடுதல் இன்றிப் பேணிக்கொள்ளும் அன்பையும் இதில் காண முடிகிறது.

தொல்காப்பியம் கணவன் மனைவியரின் பண்புகளாக மேலும் சிலவற்றைக் காட்டுகிறது.

பெருமையும் உரனும் ஆடூஉ மேன (பொருள். 95)

அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்
நிச்சமும் பெண்பாற் குரிய என்ப (பொருள். 96)

உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று (பொருள். 111)

பெண் தனது காதல் வேட்கையை வெளிப்படையாகக் கூறுதல் தமிழ்ப் பண்பாடு அல்ல. இதனைத் தொல்காப்பியம்,

காமத்திணையின் கண்ணின்று வரூஉம்
நாணும் மடனும் பெண்மைய ஆகலின்
குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை
நெறிப்பட வாரா அவள்வயி னான (பொருள். 106)

எனக்கூறுகிறது.

ஒருத்திக்கு ஒருவன் என்பது பெண்மைக்கான கடுமையான ஒழுக்கமாகும். இவ்வொழுக்கம் குடும்பமாக வாழ்கிற குலமகளுக்கே பெரிதும் வலியுறுத்தப்படுகிறது. ஆனால்

ஆண்களுக்கும் பரத்தையருக்கும் இது பொருந்தவில்லை. ஆண்கள் மனைவி உயிருடன் இருக்கும்போதே, காமக் கிழத்தி என்னும் வைப்பாட்டியுடனும் பலருக்குப் பொதுவான பரத்தையிடம் சென்று உறவு கொள்வதும் சமூகத்தால் ஏற்கப்பட்டிருந்தன. பரத்தையிடம் சென்று உறவு கொள்வதற்கு அகத்துறைகளை அமைத்து இலக்கியம் படைக்கிற மரபினையும் தொல்காப்பியத்தில் காணமுடிகிறது.

ஆண்களோ பெண்களோ தங்கள் இல்லத்துணைவன் இறந்த பின்னர் மறுமணம் செய்து கொண்டதற்குச் சான்று தொல்காப்பியத்தில் காணப்படவில்லை. எனினும் கணவன் ஒருவன் தன் மனைவி உயிருடன் இருக்கும்போதே பல பெண்களுடன் தொடர்பு கொள்ளுதலைச் சமூகம் ஏற்றுக்கொண்டிருந்தது என்பது ஆண்கள் மறுமணம் செய்திருந்தனர் என்பதற்கு வெளிப்படையான சான்றாகும்.

கணவன் இறந்ததும் மனைவி அவனைக் கொன்ற ஆயுதத்தாலேயே தன்னை மாய்த்துக் கொண்டதையும் தீயை வளர்த்து அதனுள் மூழ்கி மாய்த்துக்கொண்டதையும் பிரிவை ஆற்றிக்கொள்ள இயலாது உயிரைவிட்டதையும் தொல்காப்பியம் (பொருள். 77),

நீத்த கணவன் தீர்த்த வேலின்
பெயர்த்த மனைவி வஞ்சி என்றும்

நல்லோள் கணவனொடு நனியழல் புகீஇச்
சொல்லிடை இட்ட பாலைநிலை
கொண்டான் தலையொடு முடிந்த நிலை

என்றும் கூறுகிறது. இவற்றுக்கு மாறாகக் கைம்மை நோன்புற்றவராக இருபாலாரும் வாழ்ந்த செய்தியையும் இந்நூல் தெரிவிக்கிறது. 'காதலி இழந்த தபுதார நிலை' என்பது ஆண்மகனின் கைம்மையினையும் காதலன் இழந்த தாபத நிலை என்பது பெண்மகளின் கைம்மையினையும் குறித்துக் கூறப்பட்டனவாகும்.

கணவன் இறந்ததும் தீயுள் வீழ்ந்து மனைவி இறந்தாள் என்னும் செய்தி தொல்காப்பியக் காலத்தில் உடன்கட்டை (சதி)

ஏறும் அல்லது ஏற்றும் வழக்கம் இருந்திருக்குமோ என்று எண்ணத் தோன்றுகிறது. இவ்வழக்கம் வடஇந்தியாவிலும் தமிழகத்திலும் பழங்காலத்தில் இடம் பெற்றிருந்தது. வட இந்தியாவிலிருந்து இது தமிழகத்தில் ஏற்கப்பட்டிருந்தது என்று கொண்டாலும் தவறாகாது. ஏனெனில் வட இந்திய மரபுகள் பலவற்றை குறிப்பாக வருணாசிரம முறை, 'மறையோர் தேஎத்து மன்றல் எட்டு', 'கபிலை கண்ணிய வேள்வி' போன்றவற்றைத் தொல்காப்பியம் பெருமையுடன் புறவிலக்கியங்களின் கருக்களாகக் கூறிச் செல்கிறது.

## பொருளியல்

பொருளியல் ஏற்றத்தாழ்வு எல்லாக் காலத்திலும் மனித சமூகத்தில் தவிர்க்கமுடியாத ஒரு சாபக் கேடாகும். இந்த ஏற்றத்தாழ்வு மனிதர்களுக்கு இடையே தரநிலையில் – மதிப்பில் ஏற்றத்தாழ்வை உருவாக்கிவிடுகிறது. தொல்காப்பியம் ஈ, தா, கொடு என்று மூன்று ஒரு பொருட் கிழவிகளைச் சுட்டி, அவற்றைப் பயன்படுத்துவோரின் தரநிலைகளைச் சுட்டி, அவற்றைப் பயன்படுத்துவோரின் தரநிலையினையும் விவரிக்கிறது. பொருளியலில் இருப்பவன் இல்லாதவனை விடவும் உயர்ந்தவனாகக் கருதப்படுகிறான். இல்லாத வறியன் ஒருவன் இருப்பவனிடம் இரக்கும்போது 'ஈ' என்ற சொல்லைப் பயன்படுத்த வேண்டும். இருப்பவன் தன்னிலும் பொருளியலால் தாழ்ந்தவனிடம் ஒன்றனைக் கேட்கும்போது 'கொடு' என்ற சொல்லைப் பயன்படுத்தவேண்டும். ஒத்த தகுதி உடையவர்கள் 'தா' என்று கேட்கலாம். பொருளியலில் செழுமையானவனை 'உயர்ந்தோன்' என்றும் வறியவனை 'இழிந்தோன்' என்றும் ஒப்புமை உடையோனை 'ஒப்போன்' என்றும் கூறுகிறது.

ஈயென் கிளவி இழிந்தோன் கூற்றே
தாவென கிளவி ஒப்போன் கூற்றே
கொடுவென் கிளவி உயர்ந்தோன் கூற்றே (சொல். 437)

தொல்காப்பியத்தின் இச்செய்தி பொருளியலால் மொழியமைப்பு பாதிக்கப்படுதலை உணர்த்துகிறது.

தொல்காப்பியம் ஊழ்வினை அல்லது விதியைப் பால் என்று குறிப்பிடுகிறது. ஆணும் பெண்ணும் காதலர்களாக மாறுவது விதியின் செயலே என்பது இந்நூலின் கொள்கை. இவ்விதி பிரிந்தோரை ஒருங்கிணைக்கும்; ஒன்றியோரை வெவ்வேறாக்கும். இவ்வாறு இருவிதத்தில் செயல்படும்.

ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப

என்னும் நூற்பா (பொருள்.90) காதலில் விதியின் செல்வாக்கினைத் தெரிவிக்கிறது.

தமிழகத்தில் பல தெய்வங்கள் வழிபடப் பெற்றமையைத் தொல்காப்பியத்தில் காணலாம். சேயோன் அல்லது வேலன் (முருகன்), மாயோன் (திருமால்), வேந்தன் (இந்திரன்), வருணன், கொற்றவை ஆகிய தெய்வங்களின் பெயர்கள் இந்நூலில் காணப்படுகின்றன. இவர்களுள் கொற்றவை தவிர்ந்த நால்வரும் ஒரு குறிப்பிட்ட நிலத்தில் வாழ்ந்த மக்களின் வழிபடு தெய்வங்களாகும். இவை தவிர எல்லாத் தெய்வங்களுக்கும் பொதுவான கடவுள், தெய்வம், வானோர் அமரர் என்ற சொற்களும் இதில் இடம்பெற்றுள்ளன.

மாயோன் மேயக்காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேயத்தீம்புனல் உலகமும்
வருணன் மேயப் பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே (பொருள்.5)

வீரர்கள் வெற்றியைப் பெறுவதற்காகக் கொற்றவையை வழிபட்டனர். கொற்றவையைப் போற்றிப் பாடுதல் 'கொற்றவை நிலை' என்று கூறப்படுகிறது.

தொல்காப்பியம் மரபியலில் நூல்களின் வகைகள் பற்றி விவரிக்கும்போது 'முனைவன்' என்ற சொல்லை எடுத்தாள்கிறது.

வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல்நூல் ஆகும். (பொருள்.640)

இங்கு வருகிற 'முனைவன்' என்பதை முழுமுதற்கடவுள் என்று அறிஞர்கள் விளக்குகின்றனர். கடவுளே வினைப்பயனிலிருந்து நீங்குதற்கும் விளங்கிய அறிவுக்கும் உரிமை உடையோன் என்ற எண்ணமே இவ்விளக்கத்திற்குக் காரணமாகும். இவ்விளக்கத்தை ஏற்பதாயின் வினைக்கொள்கையினையும் (கர்மாவையும்) ஏற்றாகவேண்டும்.

தொல்காப்பியம் ஆவி வழிபாட்டையும் குறிப்பிடுகிறது. போரில் வீரச்சாவினை எய்திய மாவீரனின் நினைவாக அவனை அடக்கிய (புதைத்த அல்லது எரித்த) இடத்தில் கல்லை நாட்டி வழிபடுதலை வெட்சித்திணை விளக்கத்தில் இந்நூல் குறிப்பிடுகிறது.

காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்
சீர்த்தகு மரபின்
கல்லொடு புணர (பொருள். 63)

இதுவன்றி இறந்தவர்கள் அடக்கம் செய்யப்பட்ட காட்டில் சென்று ஆவிகளை வழிவட்டதையும் (காடுவாழ்த்து) இது குறிப்பிடுகிறது.

நடுகல் வழிபாடாகிய இவ்வீரவழிபாடு ஆவி மேல் மக்களுக்கு இருந்த நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது. இதுவே நாளடைவில் சிறு தெய்வழிபாடாக மாறியிருக்கவேண்டும்.

நடுகல் வழிபாடு பிறிதொரு செய்தியையும் புலப்படுத்துகிறது. உருவ வழிபாடு வழக்கில் இருந்தது என்பதே அது. தொடக்கத்தில் இறந்தவனின் அடக்க இடத்தை அடையாளம் காணுமாறு வெறுமனே நாட்டப்பட்ட கல், நாளடைவில் அவனது பெயரையும் புகழையும் தாங்கிய கல்வெட்டாகிப்பின்னர், உருவம் செதுக்கப்பட்ட நிலையை அடைந்திருக்க வேண்டும்.

வழிபாட்டின்போது தெய்வத்தின் ஆவி மனிதருக்குள் புகுந்து, ஆடி, அருள் வாக்கு கூறியதைத் தொல்காப்பியம்,

வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
வெறியாட் டயர்ந்த காந்தள் (பொருள். 63)

என்று கூறுகிறது.

பேய் பற்றிய நம்பிக்கையும் மக்களிடம் இருந்தது. போரில் புண்பட்ட வீரனை இல்லத்தில் பேய் தீண்டாதவாறு காத்தனர். இதனை,

ஏமச்சுற்றம் இன்றிப் புண்ணோன்
பேஎய் ஓம்பிய பேஎய்ப் பக்கம்

என்று தொல்காப்பியம் (பொருள்.77) கூறுகிறது. பேய் குறித்த செய்திகள் பேய்க்காஞ்சி, தொட்ட காஞ்சி, தொடாக்காஞ்சி என்ற புறத்துறைகளாக விவரிக்கப்படுகின்றன.

தெய்வவழிபாட்டில் புராணக்கதை நம்பிக்கையும் மக்களிடம் நிலவியது. வானோர், அமிழ்தம் என்பன புராணம் தொடர்பான சொற்களே.

தொல்காப்பியத்தில் தமிழக மக்களிடம் முழுக்கட்டமைப்பு உடைய சமயம் வழக்கில் இருந்தது. தத்துவம், மந்திரம், வழிபாட்டுச் சடங்குகள், புராணம் என்னும் சமயக் கூறுகள் பற்றிய குறிப்புக்களையும் இந்நூலில் காணமுடிகிறது.

தமிழக மக்கள் தெய்வத்தைத் தம் வாழ்க்கையுடன் தொடர்புடைய பெரும் சக்தியாகக் கருதினர். அதனாலேயே சிற்றின்பம் எனப்படும் காதலுடன் முருகனையும் இணைத்து, வெறியாட்டு நிகழ்த்தலாயினர்.

### நம்பிக்கையும் பழக்கவழக்கங்களும்

நல்லநேரத்தைக் கணித்துச் செயலில் ஈடுபடுதல், சகுனம் அறிதல் போன்ற நம்பிக்கைகள் தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளன. நாள்கோள், விரிச்சி, உன்னநிலை, அறிவன் என்னும் துறைச் சொற்கள் சோதிடம் சார்ந்தவையாகும்.

'நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்' என்பது போன்ற நூற்பா அடிகள் மக்களின் நம்பிக்கையைத் தெரிவிக்கின்றன.

பழந்தமிழ் மக்கள் மக்கட்பேற்றினை இணையிலாத

செல்வமாகக் கருதினர். எனவே இனப்பெருக்கத்திற்கான காலத்தில் கணவன் தனது மனைவியைப் பிரிதலை விரும்பவில்லை.

பூப்பின் புறப்பா டீரறுநாளும்
நீத்தகன் றுரையார் என்மனார் புலவர் (பொருள்.185)

## போரும் அரசியலும்

தொல்காப்பிய அரசியலுக்கு வீரமே முதற்பொருள். அந்தக்காலத் தனிமனிதனும் சமூகமும் வீரத்தை முதற்பொருளாகக் கொண்டு தனது வாழ்வியலை நிலைப்படுத்திக்கொண்டனர் என்பதனை இது காட்டுகிறது. இதனாலேயே புறவொழுக்கம் என்றாலே போரும் அதன் வெற்றி காரணமாக உண்டாகும் புகழுமே என்ற பொருண்மை மனத்தில் தோன்றுவதாயிற்று.

புகழ் இருவழிகளில் உண்டாகிறது. ஒன்று போரில் வீரத்தை வெளிப்படுத்தி வெற்றிபெறுவதனால்; மற்றொன்று பிறர்க்குப் பொருளை வாரி வழங்குவதனால், பொருளை வழங்குதல் கொடை எனப்படுகிறது. கொடைக்கான பொருளை ஈட்டுவதற்காகவே மன்னர்களும் குறுநிலத் தலைவர்களும் போரில் ஈடுபட்டனர் என்ற செய்தியும் பழந்தமிழ் இலக்கியங்களில் காணக்கிடக்கின்றது.

மக்களுள் ஆடவர் தம் மன்னனுக்காகக் களத்தில் இறங்கிப் போரிட்டுச் சாதலைப் பெரும் பேறு எனக்கருதினர். தனது மன்னன் அல்லது தலைவன் வெற்றிபெற வேண்டும் என்று தன்னைத் தானே களப்பலி ஆக்கிக்கொண்ட வீரர்களும் இருந்தனர். இத்தற்கொலையை வெறும் கொலையாகக் கருதாமல் வேள்விப்பலியாக (ஆவிப்பலி) எண்ணினர்.

மூன்று காரணங்களுக்காகப் போர் நிகழ்ந்ததைத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. 1.மண் காரணமாக நிகழ்ந்தது. 2.பெண் காரணமாக நிழ்ந்தது. 3.தற்செருக்கினால் தன் பலத்தை மாற்றானுக்குக் காட்டுதற்காகப் போர் நிகழ்ந்தது.

மண்ணாசை காரணமாக வேற்று நாட்டின்மீது

படையெடுத்தலையும் தன் நாட்டைப் பகைவரின் படையெடுப்பிலிருந்து காத்தலையும் வெட்சி, வஞ்சி, உழிஞை என்று தொல்காப்பியம் கூறுகிறது. இவற்றுள் வெட்சி போரின் தொடக்க நிலையை விவரிக்கிறது. ஒரு நாட்டின் எல்லையில் மேய்ந்து கொண்டிருக்கிற பசுக்களை (ஆநிரைகளை) பகைநாட்டு வீரர்கள் கவர்ந்து செல்ல, அவர்களைத் தடுத்து ஆநிரைகளுக்கு உரிமை உடைய வீரர்கள் போரிடுவர். இப்போர் நாட்டின் எல்லையில் நிகழ்வது. எனவே இதனை எல்லைப் போர் எனலாம்.

பசுக்கள் ஒரு நாட்டின் பொருளியலில் முதன்மை பெறுகின்றன. பண்டைத் தமிழகத்தில் உழவும் உழவை மையமாகக் கொண்ட கைத் தொழில்களுமே பொருளியலின் வளத்தைத் தீர்மானித்தன. இவற்றுக்குப் பக்கப் பலமாகப் பசுக்கள் விளங்கின. எனவே இவை பெருஞ்செல்வமாகக் காத்துப் பேணப்பட்டன. மேலும் இவை சமய வாழ்வில் புனிதமானவையாகவும் கருதப்பட்டன. இவற்றுக்குத் தீங்கு விளைவிப்பதாதலால் போர் நிகழ்ச்சிகளால் தீங்கு நேரிடாதவாறு முன்னெச்சரிக்கையாகப் பசுக்களைக் கவர்ந்து செல்வராயினர்.

பகைநாட்டின் பசுக்களை முதலில் கவர்ந்து செல்வதன் காரணமாக, 1.போருக்கு அந்நாட்டினரைத் தூண்டுவதாகிறது. 2.தன்னாட்டின் செல்வத்தைப் பெருக்குவதாகவும் எதிரி நாட்டின் செல்வத்தை வீழ்த்துவதாகவும் அமைகிறது. 3. ஆன்மீக வாழ்வில் பசுக்கொலைக் காரணமாகத் தீவினை படராமல் தடுப்பதாக ஆகிறது.

பசுக்கள் ஒரு நாட்டின் மதிப்பு மிகு செல்வங்கள். எனவே அவற்றைப் பேணுவதும் எதிரியிடமிருந்து மீட்பதும் தன்நாட்டு மதிப்பைப் பேணிப் பாதுகாப்பதாக அமைகிறது. இதனாலேயே பசுக்கள் தமிழகத்தில் போரில் பெரும்பங்குபெற்றன.

பசுக்களைக் கவர்தலின் வாயிலாக எதிரியைப் போரிடத் தூண்டுதலும் அவற்றை மீட்டுக் காத்தற்காக எதிர்த்துப் போரிடுதலும் பண்டைத் தமிழகத்தில் மட்டுமன்றி, இந்தியா முழுவதிலும் வழக்கிலிருந்த போர் முறையாகும். இதனை வியாச பாரதத்து விராட பருவ நிகழ்ச்சிகளால் அறியலாம்.

பசுக்களைக் கவர்ந்து செல்வோர் அவற்றுக்கு உடல் வலியும் வயிற்றுப்பசியும் தோன்றாதவாறு ஓட்டிச் செல்வர். இதனை 'நோயின்றுய்த்தல்' என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. தன் நாட்டுக்குக் கொண்டு சென்றதும் வீரர்கள் தமக்குள் பகிர்ந்து கொள்வர். பிறர்க்கும் அன்புடன் வழங்குவர். இவை முறையே பாதீடு, கொடை என்று கூறப்படுகின்றன.

பண்டைத் தமிழர் போரிலும் அறநெறியைக் கையாண்டனர் என்பதற்கு நோயின்றுய்த்தல், பாதீடு, கொடை என்பன போன்ற துறைகள் சான்றுகளாகும்.

எல்லைப்போரில் வெற்றி பெற்ற வீரர்கள் தொடர்ந்து தலை நகரை நோக்கி முன்னேறிச் செல்வர். அவ்வமயம் இடைப்பட்ட நாட்டுப்பகுதிகளாகிய ஊர்களில் பெரும்போர் நிகழும் ஊர்கள் தீயிட்டுக் கொளுத்தப்படும் விளைநிலங்கள் தீக்கும் படைகளின் சாடுதலுக்கும் இரையாக்கப்பட்டுக் களர் நிலமாக்கப்படும். அவற்றில் முட்செடிகள் விதைக்கப்படும். இவை எல்லாம் வீழ்ந்த எரிதி நாடு மீண்டும் எழுச்சியுற்று வீறுகொள்ளாதிருக்க மேற்கொள்ளும் திட்டங்கள் ஆகும்.

நாட்டின் ஊர்ப்பகுதியுள் நடைபெறுகிற போரை வஞ்சி என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

ஊர்ப்பகுதிகளையும் விளைநிலம் போன்ற நாட்டுப் பகுதிகளையும் கைப்பற்றினாலும், தலை நகரை வீழ்த்தவில்லை என்றால், அது முழுமையான வெற்றியாகாது. தலைநகரிலேயே மன்னனும் முதன்மையான அதிகாரிகளும் அலுவலகங்கள், செல்வங்களைக் குவித்துள்ள கருவூலங்கள் போல்வன இருக்கும். எனவே தலைநகரைக் கைப்பற்றியாக வேண்டும்.

தலைநகர் கடுமையான அரண்களால் சூழப்பட்டிருக்கும். வலிமையான மதிற்சுவர்கள், அவற்றை அடுத்து அகழி, காவற்காடுகள் போல்வன தலைநகருக்கு அச்சமற்ற பாதுகாப்பாகும். எனவே இந்த அரண்களை அழித்தாக வேண்டும்.

தலைநகரைக் கைப்பற்றிட நடத்தப்பெறுகிற போர் நிகழ்ச்சிகளை மதிற்போர் என இலக்கண நூல்கள் கருதுகின்றன.

தொல்காப்பியம் மதிலைக் கைப்பற்றிட நடைபெறும் போர் நிகழ்ச்சிகளை உழிஞை என்றும் அதனை எதிரிகளிடமிருந்து காத்தற்கு நடைபெறும் நிகழ்ச்சிகளை நொச்சி என்றும் குறிப்பிடுகிறது.

ஒரு நாட்டிலுள்ள பெண்ணை குறிப்பாக இளவரசியை மணம் கேட்டு மறுத்தமையால், அந்நாட்டின்மீது போர் தொடுத்தலும் நிகழ்ந்தது. இதனை 'மகட்கொடை அஞ்சிய மகட்பாற் காஞ்சி' என்னும் தொல்காப்பியப் புறத்துறையால் அறியலாம்.

அரசன் தானை (காலாள்), யானை, குதிரை, தேர் என நால்வகைப் படைகளை அமைத்திருந்தான். போருக்கு ஆயத்தமாகும் முன்னர்ச் சில சடங்குகள் நிகழ்த்தப் பெற்றன. எதிரிநாட்டுப் படை வலிமை குறித்து ஒற்றர்கள் ஆராய்ந்து (வேய்) வந்தனர். கொற்றவைக்குச் சிறப்பு வழிபாடு நடத்தப்பெற்றது: அண்டை, அயலில் உள்ள மாந்தரின் வரய்ச்சொல் (விரிச்சி) அறியப்பட்டது. உன்னமரத்தின் வளமை (உன்னநிலை) ஆராயப்பட்டது. இம்மரம் தழைத்தால் வெற்றியும் வாடினால் தோல்வியும் அமையும் என்ற நம்பிக்கை இருந்தது.

மன்னன் உடைவாளும் வெண்கொற்றக் குடையும் கணிக்கப்பட்ட நல்ல நேரத்தில் வெளியே எடுத்துச் செல்லப்பட்டு, சகுணம் பார்க்கப்பட்டது. மதிலைக் கைப்பற்றியதும் தலைநகர் வீழ, நாடு கைப்பற்றப்பட்டதாகிறது. கைப்பற்றிய அரசன் புனித நீராடி அந்நாட்டின் மன்னனாக முடிசூட்டிக் கொள்வான். இதனைத் தொல்காப்பியம்,

இகல்மதில் குடுமி கொண்ட மண்ணுமங்கலம் (பொருள்.69)

என்றும்

மன் எயில்அழித்த மண்ணுமங்கலம் (பொருள்.88)

என்றும் குறிப்பிடுகிறது.

அரசனது பிறந்த நாளும் முடிபுனைந்து அவன் பொறுப்பேற்ற நாளும் சிறப்பு விழாவாகக் கொண்டாடப்பட்டன.

சிறந்த நாளினில் செற்றம் நீக்கிப்

பிறந்த நாள்வயின் பெருமங்கலமும்
சிறந்த சீர்த்தி மண்ணு மங்கலமும் (பொருள். 88)

பிறந்தநாள் விழாபெருமங்கலம் என்றும் பொறுப்பேற்ற நாள் (பட்டாபிஷேக நாள்) மண்ணுமங்கலம் என்றும் கூறப்படுகின்றன.

## இலக்கியம்

பழந்தமிழில் பலவகை இலக்கியங்கள் வழக்கில் இருந்தன. இதனைத் தொல்காப்பியச் செய்யுளியலிலும் புறத்திணையியலிலும் (குறிப்பாக, பாடாண்திணை நூற்பாவிலும்) காணமுடிகிறது.

வெண்பா, கலிப்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, பரிபாடல், கைக்கிளை (மருட்பா) போன்ற யாப்பு வகைகளால் பாடல்கள் புனையப்பட்டன. இவை தவிர உரை நூல்களும் எழுதப்பட்டன. இலக்கணநூல்கள் சூத்திரம் என்றொரு யாப்பினால் இயற்றப்பட்டன.

வாய்மொழி (மந்திரம்), பிசி (விடுகதை), முதுமொழி, பழமொழி, அங்கதம், அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, இழைபு, புலன், புறநிலை வாழ்த்து, செவியறிவுறூஉ, வாயுறை வாழ்த்து போன்றவற்றைத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. இவை யாவும் பல்வேறு இலக்கிய வகைகளாகக் கருதத்தக்கவை.

ஆற்றுப்படை, கண்படை நிலை, துயிலெடைநிலை போன்றனவும் தொல்காப்பியத்தில் விளக்கப்படுகின்றன.

கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கம் (பொருள். 88)

என்பது ஆற்றுப்படையின் இலக்கணம்.

கண்படைநிலையைத் திருப்பள்ளி யடைபாடல் அல்லது தாலாட்டு எனலாம். துயிலெடை நிலை திருப்பள்ளி எழுச்சி, பாவைப் பாடல் ஆகியவற்றைக் குறிப்பிடுவதாகும்.

தொல்காப்பியம் பாவனை இலக்கிய வகைகளையும் குறிப்பிடுகிறது. அரசனைத் திருமாலாக அல்லது பிற தேவராகப் பாவித்துப் பாடுவது பூவைநிலை.

காமப் பகுதி கடவுளும் வரையார் (பொருள்.81)

குழவி மருங்கினும் கிழவ தாகும் (பொருள். 82)

ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப
வழக்கொடு சிவணிய வகைமை யான

இவையாவும் கடவுளோடும் குழந்தைகள், ஊர்மக்களோடும் (பெண்களோடும்) காம உணர்வினைச் சாத்திப் பாவனை செய்து பாடப்படுவனவாகும். கடவுள்மீது தெய்வப் பெண்டிரும் மானிடப் பெண்டிரும் காமுறலை இளம்பூரணர் குறிப்பிடுகிறார். இது பிற்காலத்தைய நாயக - நாயகிப் பாவனைப் பாடல்களின் வித்தாகும். ஊரொடு தோற்றம், குழவி மருங்கு என்பன பல பருவப் பெண்டிரும் காமுறுதலாகிய உலாப்பாட்டைக் குறிப்பனவாகும்.

# தமிழ் வேலி

ஈரோடை அருண்மணி

தண்டமிழ் வேலித் தமிழ்நாட் டகமெல்லாம்
நின்று நிலைஇப் புகழ்பூத்த லல்லது
குன்றுத லுண்டோ மதுரை - கொடித்தேரான்
குன்ற முண்டாகு மளவு (பரிபாடல்திரட்டு.9)

இப்பாடலை இன்னார் எழுதினார் என்பது தெரியவில்லை. ஆனால் அவர்குறிப்பிடுகின்ற "தண்டமிழ் வேலி" என்னுந்தொடர் யாரைக் குறிப்பிடுகிறது என்று எண்ணிப்பார்க்கின்ற தமிழ் நெஞ்சங்கட்குக் கட்டாயமாய்ப் புலப்பட்டே தீரும். "தண்டமிழ் வேலி" என்னுமித் தொடரால் குறிக்கப்பெறுகின்ற இவ்வருளாளர் தமிழ்க்குடி தலைக்க நல்லாற்றின் நின்ற துணையாவர். அறத்தாற்றின் தமிழ் வாழ்க்கையாற்றித் தமிழ் மக்களுடைய இல்வாழ்க்கை மட்டுமல்லாது வையத்தார் வாழ்வெல்லாம் சிறக்கும்வகையில் அறவினைகள் ஓம்பி அருங்கடன் இறுத்த நற்றமிழ்ச் சான்றோராம் அந்தணர், ஐயர், பார்ப்பார் ஆகிய முத்திறத்தாரே 'தண்டமிழ் வேலி' என்னும் பெருமைக்கும் சிறப்பிற்கும் உரியராவார். இவர் ஆரியம் தோன்றுவதற்குப் பன்னெடுங்காலத்தின் முன்னர் தோன்றியவராவர்.

வேலி என்பது புறத்தே நின்று தன்னகத்தே உள்ளவற்றைக் காக்கக் கடமைப்பட்டதாகும். ஒரு நாட்டிற்கு அரசியல் வேலி மட்டும் அமைத்து விட்டால் போதாது, அரசியல் வேலி சிலநாட்களுக்கு வேண்டுமானால் காப்பரணாகச் செயல்படக் கூடும். காலப்போக்கில் அரசியல் வேலி காப்பரண் என்கிற வலுவை இழந்துவிடும். எடுத்துக்காட்டாக, இன்று தமிழக எல்லையில் உள்ள ஊர்களான பசுவூர் (ஓசூர்) தகடூர் மாவட்டம் திருத்தணி ஆகிய ஊர்களைக் குறிப்பிடலாம். ஊர்கள் தமிழக எல்லைக்குள் உள்ளன. ஆனால் மக்கள் குறிப்பாகப் பசூர்ப்பகுதியில் வாழும் மக்கள் தமிழை மறந்துவிட்டனர். இது அரசியல் வேலியின் வலுவற்ற தன்மையையே புலப்படுத்துகிறது. மக்கள் ஒவ்வொருவரும் தம்முடைய தாய் மொழியைப் பேணிப் பேசித் தம்மையும், தம்முடைய பாண்பாடு மொழி ஆகியவற்றையும் பேணிக்காக்கின்ற வல்லரணாக இருத்தல் வேண்டும் என்னும் கருத்திலேயேதண்டமிழ் வேலி தமிழ்நாட்டக

மெல்லாம்" என்னுந் தொடர் அமைந்துள்ளது. "தமிழ்வேலி" தமிழ்மக்களேயாவர், வேலிக்கு வேலியாக நின்று காத்தவரே "தண்டமிழ் வேலி" என்கிறார் பரிபாடல் ஆசிரியர்.

இதுகுறித்து, தொல்காப்பியர், திருவள்ளுவர், நக்கீரர், நெட்டிமையார், நல்லந்துவனர், இளங்கோவடிகள், ஆண்டாள் நாச்சியார் அகியோர் கருத்துக்களையும் காண்போம்.

தொல்காப்பியர், தம் நூலுள் அந்தணர், ஐயர், பார்ப்பார், அந்தணர்மறை ஆகிய செய்திகளை மிகத்தெளிவாகவே விளக்கியுள்ளார். தெய்வத்திரு வள்ளுவரோ அந்தணரையும் பார்ப்பாரையும் பற்றி மட்டுமே குறிப்பிடுகிறார். நக்கீரர் பெருமான் அந்தணரையும் ஐயரையும் பற்றிமட்டுமே திருமுருகாற்றுப்படையிலே காட்டியுள்ளார். நெட்டிமையார் பார்ப்பாரின் இயல்புகுறித்துக் குறிப்பாக உணர்த்தியுள்ளார். நல்லந்துவனார் அந்தணர் இறுத்த அருங்கடன்பற்றிய காட்சியைப் படம் பிடித்துள்ளார். இளங்கோவடிகளும் ஆண்டாள் அம்மையாரும் பார்ப்பார் செயலைக் காட்சியாக்கியுள்ளனர். இவர்தம் கூற்றால், அந்தணர், ஐயர், பார்ப்பார் ஆகிய மூவரும் ஒரே திறப்பட்டவரல்லர்; மூவரும் மூன்று வேறு திறப்பட்டவர் என்பதைத் தெளிவாகவே விளக்கியுள்ளகாரணத்தாலேயே இவ்வளவு விரிவாக எழுதநேர்ந்தது. மூவரைப் பற்றியும், நன்கு தெரிந்துகொண்டால் அது வழிபாட்டு மொழிபற்றிய கேள்விக்குத்தக்க முடிவு காணக் கருத்துக்களை முன் நிறுத்தும்.

ஐயர் அந்தணர் பார்ப்பார் என்னும் இம்மூவரும் தமிழரேயாவர். தமிழர் அல்லாதவரைத் தமிழ்ச்சான்றோர் தம் நூலிலே குறிக்கமாட்டர். ஏனெனில் இச்சான்றோர் உரைக்கின்ற செய்திகள் தமிழர்தம் மரபுவழிப்பட்ட மாற்றருஞ்சிறப்புடைய செயல்களைப் பற்றியவையாகும். அவை தமிழ் மரபிலே தோன்றிய தமிழ்த் தோன்றல்கள் தவிரப் பிறர் எவராலும் அறியமுடியாதவை; அறிந்து அவ்வளவு துல்லியமாகச் செய்ய முடியாதவையும் ஆகும்.

ஐயர் என்பார் யார்?

ஐயரென்பார் ஊர்த்தலைவராயும், கல்விநிறுவனம் போலும் குமுக அமைப்புகட்குத் தலைவராயுமிருந்து தமிழ் மாநிலத்திலே அருங்கடனிறுத்தனர். "ஐவியப் பாகும்" என்னும் (சொல்.8 உரி.87)

தொல்காப்பியத்தின்படி வியத்தகு செயல்கள் புரிந்து மக்களைத்தம்பால் கவர்ந்து மக்களை நன்னெறிப்படுத்திய தலைமைசால் தக்கார்களேயாவர். இத்தலைமக்கள் ஆற்றிய செயல்பற்றித் தொல்காப்பியர்.

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரண மென்ப" (பொருள்4. கற்.)

என்று கூறியுள்ளார். மக்களிடையே பொய்யுரைத்தலும் குற்றமிழைத்தலும் ஆகிய தீயசெயல்கள் தோன்றிய காலத்தில் ஐயரென்கிற தலைவர்கள்கூடிக் 'கரணம்' என்று சொல்லப் படுகின்ற சட்டங்களை இயற்றினர் என்பதே அதன் பொருளாகும். கரணம் என்பதற்குச் சட்டம் என்பதே பொருளாகும். அது எவ்வாறெனில் 'பொய்' 'வழு' ஆகிய குற்றங்கள் நிகழாமல் தடுத்துக்காக்கின்ற ஆற்றல் சட்டத்திற்கேவுண்டு. கரணம் என்பதற்குத் திருமணச்சடங்கு என்று பொருள்கொண்டால், குற்றத்தைத் தடுத்து நிறுத்தும் வலிமை சடங்கிற்கு இல்லை யென்பது யாவரும் அறிவோம்; எனவே சடங்கு என்பது பொருந்தாது.

இதுவன்றியும், 'ஐ', 'என்ஐ' என்னும் சங்ககால வழக்குகள் யாவும் 'தலைவன்' என்னும் பொருளிலேயே ஆளப்பட்டுள்ளன. இன்றும் நாம் வீட்டுக்குரிய தலைவனாம் தந்தையை 'ஐயன்' அல்லது 'ஐயா' என்றே குறிப்பிடுகின்றோம். இந்த நடைமுறை வழக்குப்பற்றியும் 'ஐயர்' என்னுஞ்சொல் தலைமைப் பொறுப்பிலிருந்த தக்கார் பெருமக்களையே குறித்தது என்பது தெளிவாகும்.

அந்தவகையிலேயே நக்கீரர் பெருமானும் "ஐயர்க்கேந்தியது ஒருகை" என்று திருமுருகாற்றுப் படையிலே குறிப்பிடுகிறார். அதுவும் "விண்செலல் மரபின் ஐயர்"எ ன்பர். நாட்டிலே பலரும் இருக்கும்போது முருகப்பெருமான் ஐயர்க்குமட்டும் ஒரு கை ஏந்தி உதவியது ஏனென்றால் மக்கட்காக உழைக்கும் பாங்கினையு டையவராதலின் ஐயர்க்கு ஒருகை ஏந்தினன். 'கைகொடுத்து உதவுதல்' என்னும் உலகவழக்குப் பற்றியே முருகன் நல்லவர்தமக்கு உதவினான். தான் ஒருவன் ஐயர் ஒருவர்க்கு உதவினால், அருகிலிருந்து அந்த ஒருவர் மக்கள் பலர்க்கு அருகிருந்து உதவுதல் வேண்டும் என்னும் நோக்கம் பற்றியே ஆகும். எனவே ஐயரென்பார் தலைவரென்பது பெற்றாம்.

தொடரும்

பதிப்பாசிரியர்.

பேராசிரியர். இரா. சதாசிவம்

## ஆசிரியர் குழு

பேரறிஞர். நா. பாலுசாமி
பேரறிஞர். தமிழண்ணல்
பேரறிஞர். செ. கந்தசாமி
டாக்டர். ந. சேதுராமன்
பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி
பேரறிஞர். கதிர். மகாதேவன்
பேரறிஞர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி
பேரறிஞர். இ.கி. இராமசாமி
திரு. சே. அரிராமநாதன்
திரு. வே. திருவரங்கராசன்
திரு. ந. வாசுகிராசா